# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>

## <u>அசல் வழக்கு எண்.491/2001</u>

**2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி.ஆர்.ஈஸ்வரி, Grade III B.C அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | :: | முருகன் | தொழில் | :: | |
| தந்தை / கணவர் பெயர் | :: | ஆயிப்பிள்ளை | கிராமம் | :: | |
| வயது | :: | 66 | வட்டம் | :: | காஞ்சிபுரம் |
| நேரம் | :: | முற்பகல் 01.00 முதல் 01.15 வரை | | :: | |

<u>பி.வா.த.சா.1 முதல் விசாரணை</u>

நான் பிரதிவாதி தரப்பு சாட்சி. என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. 13.12.1996 ம் ஆண்டு பச்சையப்ப செட்டியார் மற்றும் அவரது குமாரர்கள் யாதவ சங்கம் அவரின் பிரதிநிதி முருகன் அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் பிவாசாஆ1. 15.03.2004 ம் தேதியில் சர்வே எண் 687/1 க்கான தூய அடங்கல் பதிவேடு அசல் பிவாசாஆ2. (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 11.01.2006 ம் தேதியில் சர்வே எண் 687/1 க்கான தூய அடங்கல் பதிவேடு அசல் பிவாசாஆ3. (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) களக்காட்டூர் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கிய களக்காட்டூர் கிராம வரைபடம் அசல் பிவாசாஆ4.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.